உ

கடவுள் துணை.

K. S. செல்லப்பா, S G. கிட்டப்பா,
T. M. மருதப்பா, மாஸ்டர். முத்தப்பா
இவர்கள் பாடிவரும்

# புதிய
# பஜனைப் பாட்டுகள்.

(இரண்டாம் பாகம்)



இஃது
சூளை-மாணிக்க நாயகரவர்களால்,
சென்னை சூளை, ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்தில்
டைட்டில்பேஜ் மாத்திரம் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1926 [விலை அணா 1.

இப்புத்தகம் தேவையானால், S. T. மாணிக்க நாயகர்,
இராமலிங்கம் & கம்பெனி, சூளை ஈரோட், மதராஸ்.

# ஜப்பான் பட்டு குட்டைகள்



மிகவும் நேர்த்தியான பளபளப்போடும் கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளவும், துப்பட்டாக்களாகவும், ஸ்ரீகள் மேலாக்காகவும், சிறுபெண்கள் தாவணியாகவும் உபயோகிக்கலாம்.

இதில் பச்சை, வெள்ளை, சிகப்பு, வெண்சிகப்பு, ரோஸ் ஊதா, நீலம், மஞ்சள், மேக்வர்ண முதலிய பலரகங்கள் உண்டு. குறைந்த விலை குட்டை 1-க்கு ரூபா 2 12 0

---

“இராஜேஸ்வரி”

## கூந்தல் வளரும் தைலம்

அநேக நற்சாட்சிபத்திரங்கள் பெற்றது



இத்தைலம் சிறந்த வன மூலிகைகளினால் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டது. சிறந்த வாசனையும், கூந்தலை நீளமாக வளரச் செய்யும் அபார சக்தியும் இதற்குண்டு. சகலவித சிரரோகங்களையும், கண்களில் நீர் வடிதல், மயக்கம், கண்ணெரிச்சல் முதலிய வியாதிகளையும் அடியோடு நீக்குவதன்றி சரீரத்திற்கு ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். டின் 1-க்கு விலை அணா 12.

## மயிர் போக்கும் சோப்

உரோமத்தை நீக்கும் ஓர் சிறந்த வஸ்து. இதற்கு கத்தி வேண்டுவதில்லை எந்த இடத்தில் ரோமத்தை நீக்க வேண்டுமோ அந்த இடத்தில் கொஞ்சம் ஜலத்தைப்பூசி அதன்மேல் சோப்பைத் தேய்த்து ஐந்து நிமிஷம் பொறுத்து கார்டினாலாவது ஓலைத் துண்டினாலாவது வழித்துவிட்டால் உரோமம் யாவும் நீங்கி மழமழப்பாகும்.

சோப் 1-க்கு விலை அணா 0 6 0
3-சோப்சேர்ந்தபெட்டி ரூ 1 0 0

## நரைமயிர் கருக்குந் தைலம்




இத்தைலத்தை நரைத்த மயிருக்கு பூசிய 5-நிமிஷங்களுக்கெல்லாம் கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டாக்கும். மயிரைச்செம்பட்டையாகவும், சாம்பல் நிறமாகவும் மாற்றி விகாரப்படுத்தும் குணம் இத்தைலத்தில் கிடையாது. வயோதிகரை வாலிபரைப்போல் தோற்றுவிக்கும் உபயோகிக்கும் விதம் பார்சலுடன் அனுப்பப்படும். பாக் 1-க்கு ரூ. 1.

சர்வ தேள்

## விஷ நிவாரண சஞ்சீவி

குணமிராவிடில் ரூ 50 பரிசளிக்கப்படும்



ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டியமுதன்மையான ஔஷதம். தேள், நட்டுவாக்கனி, செய்யான், பாம்பு, எலி முதலிய விஷங்கள் 2-நிமிஷத்தில் பறக்கும். இது அநுபோகமுள்ள கைகண்ட மருந்து, உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். இரண்டுவிதமருந்து பாக் 1-க்கு அ. 8.

---

எஸ். டி. சர்மி அண்டு கம்பெனி, சூளை போஸ்ட், சென்னை.

உ

செந்தில்வேலவன் துணை.

புதிய பக்திரச

# பஜனைப் பாட்டுகள்

## இரண்டாம்பாகம்.

விநாயகர் துதி வெண்பா.

அரிஹரன் அம்மைமரீது ஆக்டர்கள் பாடியாடி
பரிசதுபெற்றநற் பாமாலை—சிறியவன்
அச்சிட்டு விலைசெய்ய ஆனைமுகனே யென்னை
ரக்ஷிக்க தொழுதனனின் ருள்.

இராகம்-யமுனகல்யாணி, அடதாளசாப்பு

பல்லவி.

சாமி ஏதையா இந்த வேதை சாமி ஏதையா.

கண்ணிகள்.

1 பூமிலுள்ளோர்க்கெல்லா மாதாரம்ராமா
நீமனதிலிப்படி நினைந்திடலாமா சாமி

2 சங்கையேனுனக்கு சமானம்வேறேதோ
உன்கையில்கோதண்டம் ஒன்றேபோதாதோ சாமி

3 அடிப்பாரோராட்சத ரதிகமோ ஆடு
கடிக்குமென்றுயோரி கலங்குமோ நாடு சாமி

4 உன்மகிமையறியாய் வுருகிருயிங்கே
பிரம்மாதிதேவர்க்கும் பிழைப்பினியெங்கே சாமி

5 உதவிசெய்வோர்க்கிடை யூறுண்டோகாணும்
பதராதிருந்தல்லோ பார்த்திடவேணும் சாமி

6 அநுமாதிகள்பல மரியாயோசாமி
நினைவுநீகலங்கினுல் நிற்குமோபூமி சாமி

7 சொன்னேன்குறையில்லை சுகமினிமீதே
அன்னைசீதைவர லாச்சுதிப்போதே சாமி

இராகம்-இந்துஸ்தான்பியாக், தாளம்-ஆதி

எஸ். ஜி. கிட்டப்பா பாடிவரும்

ஸ்ரீராமர் பல்லவி.

தசரதராஜ குமாரா சுகுமாரா
அலங் காரா அதி தீரா தச

அநுபல்லவி.

1 இசைபெருகியரகு வம்ஸசிலாக்யம்
எழில்பிதுர்வாக்யப்பரி பாலனயோக்யம்
வசைத்தவறிதனுல் வரும்பெருமபாக்யம்
மனதில் நீ உணர்தம்பி பரதா சுகமுனிதா
சத்யவிரதா அத்திரதா தச

பரதர் பல்லவி.

கௌசலைமகிழும் விநோதா குண நீதா
ரகு நாதா என்மேல் வாதா கௌ

2 தாய்செய்த வினையினுல் தவிழநொந்தேனே
தரணியி லெழுந்தர்ம மாயடைந்தேனே
நேயமோடுவும தடிபணிந்தேனே
நிச்சய மிதுததி வாரும் அருள் தாரும்
ஆசைத் தீரும் யெனைக் காரும் கௌ

ஸ்ரீ ராமர்.

3 வருட மீரேழு வனத்தினில் கழித்தே
வருவே னயோத்தி வளர்நக ரடுத்தே
அருமை பெருமையுன தன்பினை நினைத்தே
அதிதுரிதமுடனே வருவேன் அருள்புரிவேன்
ஆசை தருவேன் தவறிடேன் தச

பரதர்.

4 உமதுதெரிசன மென்றுகாண்பேனே
உத்தமாவுமைப்பிரிந் துயிர்தரிப்பேனே
அமையுமயோத்யமா நகரடைவேனே
ஐயோசகியேனென தண்ணு மணி வண்ணு
மலர்க் கண்ணு . கமல வண்ணு கௌ

சுவாமி விவேகானந்தா என்றமெட்டு

பல்லவி

அயோதிப் பட்டாபிராமனே அரிபரந் தாமனே.
வையமுறங் கீரதேவா
கருணைசெய் மகானுபாவா அ

சரணம்

1 தாடகை சம்மாரா சர்யுச்ய மளிக்குந்தீரா
நாடினேனுனைநேரா நடனகெருடனேறிவாரா அ

2 சீதாபி ராமனே செனைமறை புகழ்பவனே
ஆதாரம்நீயேவண்ணா அலைகடலிலமருங்கண்ணா அ

---

கலியுக ஆஞ்சனேயர் சாரங்கபாணி நாயுடு அவர்கள்

பாடிவரும் தசரதராஜகுமாரா என்றமெட்டு

இராகம்-இந்துஸ்தான் பியாக், தாளம்-ஆதி

பல்லவி

சாதுஜஞோர்த்தன ராமா சுகநாமா நத்தசோமா
பல பீமா அரே ராமா ராமா சாது

1 சீத்தான் வேஷன சிந்தித்த மௌன
ஸ்ரீத்தஜெனவந்தித்தராமா சுகநாமா நத்தசோமா
பல பீமா அரே ராமா ராமா சாது

2 ஜெனன மரணசௌ பாங்கசு நாமா
சகலலோக்காபி ராமா சுக நாமா நத்த சோமா
பல பீமா அரே ராமா ராமா சாது

---

முத்துக்குமரையனே என்றமெட்டு

பல்லவி

நீல மேக ஸ்யாமளா
பால கோப்பால கிருஷ்ண நீல மேக

கண்ணிகள்

1 காலக்கால பாலசீலசுகு ஞலகோபப்பாலா
இந்தாக்கராவதேலா கருணலவாலநீல மேக

2 பந்த்த மேலனு சிந்த்த நிர்ச்சி னுங்க்
கிம்பப் ரோவ ராதா
தயையின்சுகைனலேதா தயராலேதா நீல மேக

3 பஞ்ச்ச பாண்டவலு மிஞ்ச்சி யக்த்தினினி
என்சிக் காவ லேதா
தயையின்சுச்கைனராதா நாந்தோனுவூதாநீல மே

---

தாயே மீனுக்ஷி என்றமெட்டு

பல்லவி

மீனுக்ஷி ரமணு வேதாந்த சுகுணு மதுரை மீனு

கண்ணிகள்.

1 நானொரு துரும்பு நம்பினேன் விரும்பு
நானிலந்தனி லேவருந்துய
ரேயகற்றிட வேணும்சுந்திர மீனு

2 அய்ய நின்னருளே அடியேனுக்கருளே
அழகுற்றி திரு மதுரைப்புவியினில்
அருமைப் புகழ்பெறும் மணிரத்ந ஒளி மீனு

3 மாமுத்துலிங்கன்தமிழ் பூமிக்குலுங்கும்புகழ்
மதுரவிசங்கம் தனியெனஜம்பம்
அடியெனதஞ்சம் படிமிசைகொஞ்சும் மீனு

---

ராமபஜனே கோரியா என்றமெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ஆதி

பல்லவி.

சாமி சண்முகதெய்வமே உனக்கபயம்.

கண்ணிகள்.

1 பூமியெலாம்புகழ் பூண்டகதிர்காமா
புண்யனே சைவநேமா உனக்கபயம் சா

2 சத்துச்சித்தானந்த சாகரக்கடலே
சஞ்சலந்தீர்த்தருளே உனக்கபயம் சா

3 இல்லற்போகம் இழுக்குதேபாசம்
ஏனையாளாயிதுநேரம் உனக்கபயம் சா

4 பேரின்பமீகுவாய் பிறவிக்கருவறுப்பாய்
பிழையெலாம்நீபொறுப்பாய் உனக்கபயம் சா

5 உன்கையில்ஞானவேல் ஒன்றிருக்கும்போது
ஒருபயம்யெனக்கேது உனக்கபயம் சா

6 சுத்தஅத்வைஞானி சுப்பராயனின்பணி
ஜோதிசொருபம்மணி உனக்கபயம் சா

இராகம்-மத்தியமாவதி, தாளம்-ஆதி

பல்லவி.

இந்தவேளை வந்தருளையா
கந்தனே மெய்யா
சந்ததம்நீயே க்ருபைசெயா
சிந்தைமகிழ்ந்து சுந்தரனே பன்னிருகையா
சுபம் பெற இது சமயமே
சுப்ரசன அற்புதமே விற்பனைக ளனுதினமும்
அதி விக்கசித சரவண
போர்புரி கற்பனமிக தற்பரனாகிய உனையே
அனு தினமுந்த னடிமையே
இப்புவியி லிப்பிறவி ஒப்பிடேன் கருணைபுரியும்
ஜெக மெங்குமே துதிபுரியும்
மாசிலாத மாமணிமா மகத்துவமே
மிக ஜெகதள ரகமிகு
தேசுலாவும் ஈசனுன வாச வனே
வர மருளுப காரனே
பூசித்தேனு னுசைத்திர நேசம தாய்
நீல மாமயில் வாகனு
நிதமுனை நான் சதமெனவே என்னிதயமதில்வா
இட ரினைத்தையும் தீர்த்தருள்
நித்தியனே நிர்மலனே நிற்குணனே நீ
திரிலோக மெங்கும் நிறைந்த
திவ்யபரி பூரணனே காரணனே நீ

அநுபல்லவி.

சத்துசித்தபரி சுத்த துய்யனே
முத்திக்கொருவித் தானகர்த்தனே
தத்துவத்தில மர்ந்திடுங் குருப்ர
த்தியிது யெனக்குன தருள்நரும் புவிதனில் இந்

சரணம்.

எத்தேசக்காலமுன்னே நத்துமன்பர்க்குவந்து
ஈந்தாய் வரங்களையனே இகபர சுக மருள்தனே
ஈந்தாய் வரங்களையனே ஏகவை போக யோக
எங்கு மிலங்குந் துலங்கும் ரஞ்சனு இந்

பல்லவி.

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே.

அநுபல்லவி.

மற்ற மருந்துகள் தின்றாலு முள்ளுக்கு
வல்லே வல்லே ஐயே அடிமை பித

சரணங்கள்.

1 பாம்பும் புலியுமெய்ப் பாடுபட்டுத்தேடி
பார்த்துப் பயிரிட்டது
பாரளந்ததிரு மாயனும் வேதனும்
பார்த்துக் களித்ததுண்டு
பார்ப்பதி யென்றொரு சீமாட்டியதில்
பாதியைத் தின்றதுண்டு இன்னம்
பாதியிருக்குப் பறையா நீயும்போய்
பாரென்றுத்தாரம் தாருந் தாரும் பித்

2 பத்துத்திசையும் படந்தாலும்
பார்த்துப் பிடியாரே
தத்திக்குதிக்குந் தாளங்கள்போடுந்
தண்டை சிலம்புகொஞ்சுந்
தித்திக்குந்தேனோ செங்கரும்போநல்ல
சித்தமுடை யார்க்கே-யென்
சித்தத்தைக்கட்டி யிழுக்குதுவங்கே
சென்றால்போதுங் கண்டால்தீரும் பித்

3 ஊனரைச்சொன்னாலு மிப்பாவந்தொலையு
மூழ்வினை யூடறுக்கும்
பேரைக்கொண்டாடி புலம்புகிறார்வெகு
பேர்களுக்குப் பிழைப்பு
சாருநரை திரை தீரமருந்துச்
சாதியைப் பாராது-இன்னந்
தீராதநோய்கள் படைத்தவெனக்குத்
தீருந்திரு மையே அடிமை பித்

---

இராகம்-பைரவி, தாளம்-திரிபுடை

பல்லவி.

ஆருக்குப் பொன்னம்பலங் கிருபையிருக்குதோ
அவனே பெரியவனாம்.

அநுபல்லவி.

பாருக்குள் வீடுகள் மாடுகளாடுகள்
பணமிருந்தாலவன் பெரியவனுவானோ ஆரு

சரணம்.

1 வேதபுராணங்க ளோதினதாலென்ன
வேலைசூழ்பணமா தராலென்னகாரியம்
சாதனையாக வராதொருநாளும்
மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை பொல்லாது.

2 பாணன்மதங்க ளடங்கவேசெய்தகோ
பாலகிருஷ்ணன் தினந் தொழும்பொன்னம்பல
வாணனென்றுதர வாய்விரும்பாதவன்
வானவ ராகிலுந் தானவன் சின்னவன் ஆரு

பஜனைப்பாட்டு 2-ம் பாகம்—முற்றிற்று.

---

பெரியநாயகியம்மன் பிரஸ், சூளை மதராஸ்.

பாடப் பாடத் தெகிட்டாதது எது ?

பல வித்வான்கள் பாடிய

## பக்திரசக்கீர்த்தனக் கொத்து

ராயல் 16-பேஜ் சயிஸ் புதிய பதிப்பு.

| | | | |
|---|---|---|---|
| T. V. R. சின்னசாமிப்பிள்ளை அவர்களியற்றிய ஸ்ரீ ரங்கர் மகிமை என்னும் விஷ்ணுபஜனை கீர்த்தனம் | 0 | 3 | 0 |
| ஷை யார் இயற்றிய திருவண்ணாமலை ஜோதிப்பிரகாச மகிமை என்னும் சிவபஜனை கீர்த்தனம் | 0 | 2 | 0 |
| ஆர்மோனியம் வித்வான் மாஸ்டர் T. K. சுந்திரம் இயற்றிய பஞ்சாமிர்தப்பாட்டு எனும் பக்திரச கீர்த்தனம் | 0 | 2 | 0 |
| கோர்வை குழந்தைதாஸ் அவர்கள் இயற்றிய புதிய அரிப்ஜனைகீர்த்தனம் | 0 | 1 | 0 |
| சேலம் சுந்தரேச நாயகரவர்கள் இயற்றிய திருமயிலை கபாலீஸர் தியானம் | 0 | 1 | 0 |
| பரந்தாமன் தியானமென்னும் பண்டரிபஜனை | 0 | 1 | 0 |
| தேனினுமினிய தசாவதாரப் பாட்டு என்னும் | | 1 | 0 |
| திருமால் தியானம் | 0 | 1 | 0 |
| கந்தன் கனகாபிஷேகமென்னும் கடம்பன் தியானம் | 0 | 1 | 0 |
| பாலாபிஷேகப்பாட்டு எனும் பழனியாண்டவர் தியானம் | 0 | 1 | 0 |
| ஸ்ரீசுப்பிரமனியர் தியானம் | 0 | 1 | 0 |
| போரூர்முருகன்பாட்டு எனும் சண்முகக்கடவுள் தியானம் | 0 | 1 | 0 |
| அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளிய இன்பரச திருப்புகழ் | | 1 | 0 |
| K. S. செல்லப்பா அய்யர், K. S. அனந்தநாராயண அய்யர் இவர்கள் பாடிவரும் தியாகராஜய்யர் கீர்த்தனம் | 0 | 1 | 0 |
| மஹாத்மா காந்தி பாட்டு என்னும் தேசியத்திலகம் | 0 | 2 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் | 0 | 2 | 0 |
| உளுந்தூர்பேட்டை குழந்தைவேல் உடையாரவர்கள் இயற்றிய புதிய பக்திரசக்கீர்த்தனம் | 0 | 2 | 0 |
| S. G. கிட்டப்பா. பஜனைப்பாட்டு | 0 | 1 | 0 |
| இந்த 16 பக்திரசக் கீர்த்தனங்கள் ராயல் 16 பேஜ்சயிஸ் சுத்தப்பதிப்பு புல்கலிகோ பவுண்டு ஒரேகட்டடம் | 1 | 8 | 0 |

தனிகாப்பி தேவையானால் புத்தகக்கிரயமும் புக் போஸ்ட்டு சிலவு ஒரு அணாவும் தபால்பில்லைகள் வாங்கி அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்புத்தகங்களும் இன்னும் அதிநூதன சிந்துகளும் கும்மிகளும் கதைகளும் அம்மானைகளும் நாவல்களும் வியாபாரிகளுக்கு விலை சரசமாய் கொடுக்கப்படும்.

---

எம்துவிலாசம்:—எஸ்.டி. மாணிக்க நாயகர்,
இராமலிங்கம் அண்டு கம்பெனி, சூளை ஜரோட், மதராஸ்.